## உடுதும்பர பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 யூன் மாதம் 30 ஆம் திகதியிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உடுதும்பர பிரதேச சபையின் 2015 டிசெம்பர் மாதம் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) களஞ்சியப் பொருள்கள் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் பொருட்டு களஞ்சிய முற்பணக் கணக்கு முறையை பின்பற்றாமல் ஆண்டு இறுதியில் ரூபா 625,935 பெறுமதியான இருப்பு மீதி களஞ்சிய முற்பணக் கணக்குக்கு செலவு வைத்து நடப்புப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) காணி மற்றும் கட்டடத்தின் கீழ் சத்திரமாகரூபா 775,000 பெறுமதி கணக்குகளில்காணப்பட்ட போதிலும், அவற்றில் அநேகமானவை

சிதைவடைந்துள்ளன. ரூபா 200,000 பெறுமதியான 03 சத்திரங்கள்அழிவடைந்துள்ளதுடன், குறித்த பெறுமதிகளில் காணி மற்றும் கட்டடத்தின் கீழ் மேலும் காட்டப்பட்டுள்ளது.

(இ) ஊீசுஓ-2565 இலக்கம் கொண்ட நீர் பவுசரின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

..............................................

பெறவேண்டியதாக இருந்த 08 கணக்கு மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 16,387,845 ஆக இருந்ததுடன், 01ஆண்டுக்கு மேல் இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,541,857 ஆக இருந்தது.

1.3.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

.....................................................

செலுத்தவேண்டியதாக இருந்த 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகைரூபா 15,148,401 ஆக இருந்ததுடன்,குறித்த மீதியினுள் அடங்கியிருந்த கைத்தொழில் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 14,728,980 ஆக இருந்தது.இந்த கடன் மீதிகளில் 01 ஆண்டுக்கு மேற்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,588,417 ஆக இருந்தது

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

-------------------------------------------------------

06 கணக்கு விடயங்களுக்கு ஏற்புடையதாக போதியசான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால்,ரூபா 13,220,097மொத்தப் பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதிசார் விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2015 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானம் ரூபா 1,973,207 விளைந்திருந்ததுடன்,அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டில் வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம்ரூபா 1,380,427 விளைந்திருந்தமையினால் நிதிசார் விளைவுகளில்ரூபா 3,353,634 அதிகரிப்பு காணக்கூடியதாக இருந்தது.

| வருமான விடயம் | 2015.01.01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்ட வருமானம் | 2015 ஆண்டில் சேகரிப்பு/ தண்டப்பணம் | கொடுத்த கழிவும் எதிரீடு செய்தலும் | சேகரித்த வருமானம் | | ஆறவிட வேண்டிய மொத்த பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2015.01.01 இல் நிலுவையில் இருந்து சேகரித்த வருமானம் | 2015 இல் பட்டியலிட்ட வருமானத்திலிருந்து சேகரித்த வருமானம் | |
| | ரூ. | ரூ. | | | ரூ. | ரூ. | ரூ. |
| வீதவரியும் வரியும் | 330,815 | 634,174 | 30,100 | 21,928 | 65,245 | 427,817 | 480,099 |
| குத்தகை வாடகை | 414,905 | 517,200 | 25,970 | | 380,685 | 365,910 | 211,480 |
| உரிமக்கட்டணங்கள் | 30,000 | 645,950 | | | 30,000 | 645,950 | -- |
| வேறுவருமானங்கள் | 3,544,633 | 4,046,706 | 108,525 | 61,080 | 1,671,769 | 2,239,041 | 3,727,974 |
| கூட்டுத்தொகை | | | | | | | 4,419,553 |

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம் மற்றும் நிலுவை வருமானங்கள் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 4,419,553மீதி நிலுவையாக இருந்தது.

### 2.2.2 வீதவரியும் வரியும்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் வீதவரி ரூபா 141,500 நிலுவையாக இருந்ததுடன்,அதில்ஆண்டில் 46 சதவீதமான ரூபா 64,833 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. 2015 திசமபர் 31இல் நிலுவை ரூபா 279,764 ஆக இருந்ததுடன், குறித்த மீதியில் ஓராண்டுக்கு மேற்பட்ட நிலுவை மீதி ரூபா 141,500 ஆக இருந்தது. இதில் மேலும் அறவிடப்படவேண்டிய நிலுவை ரூபா 197,892 என செயலாளர் 2016 யூலை மாதம் 04 இல் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) 1988 பிரதேச சபை (நிதியும் நிர்வாகமும்) நிதிசார் விதிகள் 33 முதல் 42 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவையாக உள்ள தீர்வை வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.2.3 குத்தகை வாடகை

-------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் கடை அறைகள் வாடகை மீதி ரூபா 414,905 நிலுவையாக இருந்ததுடன், அதில் ரூபா 380,685அறவிடப்பட்டிருந்தது. ஆண்டில் பட்டியல்படுத்தப்பட்ட பெறுமதியான ரூபா 517,200 தொகையில் ரூபா 365,910 மட்டுமே பெறப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ரூபா 211,480 அறவிட வேண்டியதாக இருந்ததுடன், குறித்த மீதியில் 2016 யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் ரூபா 21,830 மேலும் அறவிட வேண்டியிருந்தது.

2.2.4 உரிமக்கட்டணங்கள்

---------------------------------

2000ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க மற்றும் 1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்கசட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கதேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்க, 2008 சனவரி 25ம் திகதிய 1523∴16 இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி சபையினால்சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் வழங்கவேண்டியிருப்பினும்,அதிகார இடப்பரப்பில் காணப்படும் புகையிலை உலர்த்தும் தொழிற்சாலை மற்றும் நெல் அரைக்கும் ஆலை உள்ளிட்ட 56 தொழிற்சாலைகளுக்கு இயைபான சுற்றாடல் உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அதன் காரணமாக ரூபா 168,000 வருமானத்தை சபை இழக்க வேண்டியிருந்தது. .

2.2.5 வேறு வருமானங்கள்

----------------------------------

(அ) <u>நிலப்பரப்பளவு வரி</u>

மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் ரூபா 189,315 நிலுவை மீதியொன்று இருந்துடன்,ஆண்டுக்கு ஏற்புடையதாகரூபா 11,906 பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,444 கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அது பட்டியல்பெறுமதியில் 12 சதவீதமளவுக்கு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.மீளாய்வாண்டின் இறுதித் திகதியில்நிலுவையாக இருந்த நிலப்பரப்பளவு வரி மீதி ரூபா 200,334 ஆக இருந்தது. இந்த மீதியில் 2016 யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் ரூபா 94,807 மேலும் அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) <u>நீர்க்கட்டணம்</u>

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 1,030,069 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 547,556 ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. ஆண்டின் பட்டியல்படுத்தல் ரூபா 774,508 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 337,798 அறவிடப்பட்டிருந்தது.ஆண்டு இறுதித் திகதியில் நிலுவை மீதி ரூபா 919,103 ஆக இருந்தது. இந்த மீதியில் 2016 யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் ரூபா 447,883 மேலும் அறவிட வேண்டியிருந்தது.

(ii) 03 நீர் செயற்றிட்டங்களின் கீழ் சபையானது, 514 நீர் வழங்கல் இணைப்புகளை வழங்கியிருந்ததுடன்,அதில் 410 நீர் மானி அற்ற இணைப்புகளாக இருந்தன. நீர் மானி அற்ற நீர் இணைப்புகளை வழங்குவதன்மூலம் நீர் பாவனையை குறிப்பாக அளக்க முடியாத காரணத்தினால் குறிப்பிடத்தக்க வருமானத்தை சபை இழக்க வேண்டிய சூழ்நிலை நிலவியது.

(இ) <u>வாடகை வண்டி மற்றும் முச்சக்கர வண்டி கட்டணங்கள்</u>

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 259,100நிலுவை மீதியாக இருந்ததுடன்,அதில் 06 சதவீதமான ரூபா 16,100 மட்டுமே ஆண்டினுள் அறவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் பட்டியல்படுத்தல் ரூபா 241,200 ஆக இருந்ததுடன், அதில் 19 சதவீதமான ரூபா 45,900 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது. 2015 திசம்பர் 31இல்நிலுவைரூபா 438,300 ஆக இருந்தது. இந்த மீதியில் 2016 யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் ரூபா 80,700 மேலும் அறவிட வேண்டியிருந்தது

2.2.6 நீதிமன்றத் தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணம்

..................................................................................................

2015 திசம்பர் 31இல் நீதிமன்றத் தண்டப்பணங்கள் ரூபா 147,254 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,145,660 வருமதியாக இருந்தன. 2016 யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் வருமதி முத்திரைக் கட்டணம்ரூபா 1,982,974 மேலும் அறவிட வேண்டியிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

......................................

3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

............................................................

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையானது, பெறுமதி சேர் வரி பொருட்டு பதிவு செய்திருக்காமையினால்,சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களிலிருந்து

வரியாக ரூபா 121,281ஐசேகரித்து அப்பணத்தை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது, அதனை வைப்பாக பேணப்பட்டிருந்தது.

(ஆ) தொழிற்பயிற்சி நிலையத்துடனான பல் பணி கட்டடம் அமைந்துள்ள காணியின் உரிமையை மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல், 2014 யூலை மாதம் 25 முதல் 2016 யூலை மாதம் 24 வரையிலான காலப்பகுதி பொருட்டு மாதத்துக்கு ரூபா 43,500 வீதம் ரூபா 1,044,000 தொகைக்கு இலங்கை மின்சார சபையின் பிராந்திய மின்சார அலுவலகம் பொருட்டு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. இதற்கான நொத்தாரிசு கட்டணமாக ரூபா 31,320 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 18 பதவி வெற்றிடங்களும் 02 மேலதிக பதவிகளும் சபையில் காணப்பட்டன.

(ஈ) வர்த்தக நோக்கத்தின் பேரில் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த டுப்லோ அச்சுப்பொறி பொருட்டு வருடாந்த வருமான செலவினக் கணக்கு மற்றும் திரண்ட கிரய பயனைக் காட்டும் கூற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன்,அச்சுப்பொறி பயன்படுத்தல் தொடர்பில் செலவாகிய எழுதுகருவி செலவு, பொறி பராமரிப்பு மற்றும் ஊழியர் சம்பளம் ஆகியவற்றுடன் வருமானத்தைஒப்பிடுகையில் ஆண்டினுள் ரூபா 155,526 நிதிசார் நட்டம் அடைந்திருந்தது. உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் வேறு 10 அரச நிறுவனங்களுக்கு அச்சடித்தல் வேலை செய்துகொடுத்ததன்மூலம் பெற வேண்டிய ரூபா 90,425 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த மீதியில் 2016 யூன் மாதம் 30 ஆம் திகதியளவில் ரூபா 30,000 மேலும் அறவிட வேண்டியிருந்தது.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

……………………………………………………

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகார இடப்பரப்பில் காணப்படும் சகல வியாபார நிறுவனங்களிலிருந்தும் வர்த்தக உரிமக் கட்டணங்கள்அறவிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன்,மாதிரியொன்றாக ஹுன்னஸ்கிரிய முதல் மீமுரை வரை செல்லும் பாதை மற்றும் சுற்றுப்புறத்தில் நடாத்தப்படுகின்ற 03 விடுமுறை விடுதிகளிலிருந்தும் மின்சார நிலையத்திலிருந்தும் வாடகை அல்லது கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை என2015 நவம்பர் மாதம் 18ஆம் திகதி இட சோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

(ஆ) ஹுன்னஸ்கிரிய முதல் மீமுரை வரையிலான பாதைமாதிரியொன்றாகமேற்கொண்ட சோதனையின்போது அனுமதியற்ற 06 நிருமாணிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், இதுதொடர்பில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

……………………………

3.3.1 கலல்கமுவ சனசமூக மண்டபத்தை நிருமாணித்தல்

…………………………………………………………………….

100 நாள் விசேட அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு உடனிகழ்வாக கிராமங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் கலல்கமுவ புதிய சனசமூக மண்டபத்தை நிருமாணிக்கும் முகமாக 2015 திசம்பர் மாதம் 20இல் வேலைகளை முடித்து ரூபா 980,000செலவழிக்கப்பட்டிருந்தது. கட்டடத்தின் சுவர்களை எழுப்பி கொன்கிறீட் கூரையை மாத்திரம் அமைத்திருந்தபோதிலும், கட்டடத்தின் எஞ்சிய வேலைகளை முடிப்பதற்கு பொருத்தமான நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை.இதனால்,கட்டடத்தை பயன்படுத்த முடியாது 2016 மே மாதம் 13ஆம் திகதி வரையிலும் பயன்பாடின்றி பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றது.

3.3.2 மடுகல்ல புதிய சனசமூக மண்டபத்தை நிருமாணித்தல்

……………………………………………………………………………………

100 நாள் விசேட அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு உடனிகழ்வாக கிராமங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் மடுகல்ல புதிய சனசமூக மண்டபத்தை நிருமாணிக்கும் முகமாக ரூபா 757,361செலவழிக்கப்பட்டிருந்தது. கைச்சாத்திடப்பட்ட வேலை விடயங்களுக்கேற்ப,கட்டடத்தின் சுவர்களை எழுப்பி கொன்கிறீட் கூரையை மாத்திரம் அமைத்திருந்தபோதிலும், கட்டடத்தின் எஞ்சிய வேலைகளை முடிப்பதற்கு பொருத்தமான நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால், ரூபா 757,361 செலவழிக்கப்பட்டு நிருமாணிக்கப்பட்ட கட்டடத்தை பயன்படுத்த முடியாது 2016 மே மாதம் 13ஆம் திகதி வரையிலும் பயன்பாடின்றி பற்றைகள் நிறைந்து காணப்படுகின்றது.

3.3.3 மடுகல்ல தெற்கு மற்றும் கெவுல்கம வீதிகளை புனரமைத்தல்

…………………………………………………………………………………………

100 நாள் விசேட அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு உடனிகழ்வாக கிராமங்களை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு இணங்க,ரூபா 490,000 செலவுமதிப்பீட்டுத் தொகைக்கு மடுகல்ல திவிநெகும சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்புக்கு ஒப்படைத்து வேலையை முடிவுறுத்திய பின்னர் ரூபா 441,000 செலுத்தப்பட்டிருந்தது. வேலை விடயம் 03இன் கீழ் 1:2:4($^{3}/4$) சீமெந்து, மண் மற்றும் கல் கலந்து கொன்கிறீட் இடுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த பாதை

அடியை 2016 மே மாதம் 17ஆம் திகதி சில இடங்களில் உடைத்து பரீட்சிக்கும்போது உறுதிமிக்கதாக இன்றி தரம் குறைந்த கொன்கிறீட் கலவை இட்டு உரிய நியமமின்றி நிருமாணிக்கப்பட்டிருந்தது. மேலும், கொன்கிறீட் பாதை அடியின் சில இடங்களில் வெடிப்புகள் காணப்பட்டன.

### 3.3.4 நிறைவேற்றப்படாத செயற்றிட்டங்கள்

மீளாய்வாண்டில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டு நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 740,000 மொத்தப் பெறுமதி கொண்ட 04 செயற்றிட்டங்களை ஆண்டினுள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்

மத்திய மாகாண கமத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 3,487,828 செலவழிக்கப்பட்டு கொம்போஸ்ட் செயற்றிட்டமொன்று 2010ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சிதைவடையும், சிதைவடையாத பொருள்கள் உரியவாறு வகைப்படுத்தப்படாது குப்பைகள் பெறப்பட்டிருந்தமை அத்துடன் கொம்போஸ்ட் குழியினுள் குப்பைகள் இடப்பட்டதன் பிற்பாடு சிதைவடையாத பொருள்களை முறையாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குப்பைகளில் காணப்படும் நீர் அளவினை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தாங்கி அந்நோக்கத்துக்கு போதியதாக இல்லாமை, அதன் காரணமாக கொம்போஸ்ட் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற குப்பைகளில் தேவையான அளவுக்கு மேல் நீர் இருந்தமை அத்துடன் பெரும் துர்நாற்றம் ஏற்படும் நிலமை உண்டாயிருந்தது.

(இ) மாறி மாறி சிதைவடைவதற்கும் உபயோகிப்பதற்கும் ஏற்றவாறு 02 தாங்கிகள் நிருமாணிக்கப்பட்டிருந்தபோதிலும், அதன் மூடு கூரை தாழ்நிலையில் அமைக்கப்பட்டிருப்பதனால், மனித சிரமத்தை பயன்படுத்தி சிதைவடைந்த குப்பைகளுள்ள தாங்கியை வெறுமையாக்குவதற்கு சிரமம் ஏற்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 135,500 செலவழிக்கப்பட்டு 2013ஆம் ஆண்டில் அரிதட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தபோதிலும், அவ்விடத்துக்கு மின் இணைப்பு பெறப்படாமையினால் அதனை இயக்குவதற்கு முடியாதிருந்தது.

(உ) அரிதட்டினை பயன்படுத்தாமை மற்றும் மனித சிரமத்தை கொண்டு கொம்போஸ்ட் பசளையிலுள்ள சிதைவடையாத பொருள்களை அகற்றுவதற்கான சிரமம் போன்றன காரணமாக பசளைகளை விற்பதற்கு முடியாதிருந்தது.

மேற்குறிப்பிட்ட விடயங்களின்படி, கொம்போஸ்ட் பசளை தயாரிப்பு மற்றும் குப்பை முகாமைத்துவம் உரியவாறு இடம்பெறாத காரணத்தினால் நிருமாணிப்புகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 3,487,828 தொகை பயன்பாடற்ற செலவொன்றாக மாறியிருந்தது.

3.5 வாகனக் கட்டுப்பாடு

…………………………

சபைக்குச் சொந்தமான ஒரு வாகனம் 2016 மார்ச் மாதம் 26ஆம் திகதி முதல் 2016 மே மாதம் 11ஆம் திகதி வரை 244 கி.மீ. அத்துடன் மற்றுமொரு வாகனம் 2016 ஏப்றல் மாதம் 28ஆம் திகதி முதல் 2016 மே மாதம் 11ஆம் திகதி வரை 463 கி.மீ. பயணஞ்செய்தமை தொடர்பிலான தகவல்கள் அசைவுப் பதிவேடுகளில் எழுதப்பட்டிருக்கவில்லை.

4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

…………………………………………………………..

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

……………………………

(அ) தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு திட்டமிடப்படாது நிதியேற்பாடு ஒதுக்கப்பட்ட காரணத்தினால், 11 செலவு விடயங்களில் ரூபா 331,000 நிதியேற்பாடு மொத்தமாக எஞ்சியிருந்தது.

(ஆ) உரிய கவனமும் திட்டமிடலும் இன்றி வருமான மதிப்பீடு செய்தமையினால், 05 வருமான விடயங்களின் ரூபா 2,011,000 மதிப்பிடப்பட்ட வருமானம் முழுமையாக திரட்டுவதற்கு முடியாமல் இருந்தது.

4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

…………………………………………..

பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

சபையின் உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு வேறு விடய கடமைகள் குறித்தொதுக்கப்பட்ட காரணத்தினால் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது.

4.4 சொத்து முகாமைத்துவம்
-----------------------------------------
பயன்படுத்தாத, குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்
………………………………………………………………………………

ரூபா 542,508 பெறுமதியான நீர்க்களஞ்சிய உபகரண இருப்பு பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்
----------------------------------------------------
பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடுகள் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்து முகாமைத்துவம்
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த நிருவாகம்